DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.08/2025

**prosecution witness: LW-4 as PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நவநீதகிருஷ்ணன் | தொழில் | : | இந்தியன் கடற்படை (ஓய்வு) |
| த/பெ. | : | ராமசாமி | வயது | : | |
| கிராமம் | : | | சமயம் | : | இந்து |
| தாலுகா | : | | | | |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

28.07.2025

( 1 முதல் 7 எதிரிகள் திருச்சி சிறப்பு முகாமில் இருந்து ஆஜர், 8 ம் எதிரி மருத்துவ காரணங்களால் ஆஜர் இல்லை, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**முதல் விசாரணை:-**

1. நான் இந்தியன் கடலோர காவல் படையில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 24.10.2023 ம் தேதி இந்திய கடலோர காவல் படையில் பணியில் இருந்த போது சுமார் மதியம் 2 மணியளவில் Deputy commendant அகில் பதான் என்பவர் 4 படகில் இலங்கையச் சேர்ந்த 8 நபர்கள் இந்திய கடலோர காவல்படை காவல் நிலையத்தில் கொண்டு வந்து ஒப்படைத்தார். நான் Intelligence officer என்பதால் அவர்களை மற்றும் வழக்கு சொத்துககளை மண்டபம் மரைன் போலீசாரிடம் ஒப்படைத்தேன். அவர்கள் எங்கள் காவல் நிலையத்தில் வைத்து மேற்சொன்ன நபர்கள் மற்றும் பொருட்களை பெற்றுக்கொண்டார்கள். 5 ஜிபிஸ் கருவிகள் வெவ்வேறு நிறுவனங்களை சார்ந்தது, ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டது. அவர்களிடம் இருந்து கைப்பற்றியதாக ஒப்படைக்கப்பட்டது. மேலும் 4 மொபைல் போன்களும் கைப்பற்றப்பட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.07.28 17:46:36 +0530

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. சம்பவ தேதியான 24.10.2023 ம் தேதியன்று எதிரிகளை மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் ஒப்படைத்தீர்களா என்றால் கருணாநிதி, குமார் ஆகிய இருவரும் வந்து எதிரிகளை அழைத்துச்சென்றார்கள். அப்போது நேரம் 16.30 மணி இருக்கும் என்றால் சரிதான். அந்த படகுகள் மற்றும் ஜிபிஸ் கருவிகளின் அடையாம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். செல்போனில் சிம் இருந்ததா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நான் மண்டபம் மரைன் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். கடலுக்குள் நடைபெற்ற சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

2.ஆஜர் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுடம் கடல் அட்டையோ மஞ்சலோ இருந்ததா என்றால் இல்லை. படகுகளின் பதிவு எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் அதிகாரிகள் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் அகில்பதன் என்பவர் எனது மேல் அதிகாரி என்றால் சரிதான். அகில்பதன் வழக்கு சொத்துகளை மற்றும் எதிரிகளை ஒப்படைத்த பின்பு நாங்கள் இருவரும் சந்திக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது மேல் அதிகாரி என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் இந்த எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும இல்லை என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.07.28 17:46:41 +0530

DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.08/2025

**prosecution witness: LW-3 as PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் | தொழில் | : | ஹவில்தார் |
| த/பெ. | : | கோபால் ராமன் | வயது | : | 37 |
| கிராமம் | : | மண்டபம் மரைன் காவல் நிலையம் | சமயம் | : | இந்து |
| தாலுகா | : | இராமேஸ்வரம் | | | |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

**28.07.2025**

( 1 முதல் 7 எதிரிகள் திருச்சி சிறப்பு முகாமில் இருந்து ஆஜர், 8 ம் எதிரி மருத்துவ காரணங்களால் ஆஜர் இல்லை, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் ஹபில்தாரராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.10.2023 ம் தேதியில் நானும், காவல் ஆய்வாளர், HC 1059 கருணாநிதி என்பவரும் பணியில் இருந்த போது கோஸ்ட் கார்டில் இருந்து காவல் நிலையம் வந்து Deputy commndar ஆஜர் எதிரிகள் மற்றும் 1 நபர் என மொத்தம் 8 நபர்களை ஒப்படைத்தனர்.அந்த 8 நபர்களின் பைபர் படகுகள் எண்ணிக்கை 4,ஜிபிஸ் கருவிகள் 5 எண்ணிக்கை, மற்றும் மொபைல் போன்4 எண்ணிக்கை ஆகியவற்றை கோஸ்ட் கார்டின் கடற்படை துறைமுகம் சென்று எதிரிகள் அடையாளம் காட்ட நவநீதன் என்பவரிடம் இருந்து கைப்பற்றினோம். மேற்படி எதிரிகளை காவல் நிலையம் கொண்டு வந்து நீதிமன்றத்தில் ஒப்படைத்தோம்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1.மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் நாங்கள் பணியில் இருக்கும்போது புகார்தாரர் அகில்பதன் என்பவர் தலைமையில் மொத்தம் 11

Digitally signed by SUJITH Date: 2025.07.28 17:47:23 +0530

SUJITH

நபர்கள் வந்து ஒப்படைத்தார்கள். எதிரிகளை ஒப்படைக்கும்போது 24.10.2023 ம் தேதி 14.30 மணிக்கு ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். எதிரிகளை ஒப்படைக்கும்போது யார் யார் பணியில் இருந்தீர்கள் என்றால் போஸ், சங்கர், ஆய்வாளர், நான், கருணாநிதி, மற்றும் 3 நபர்கள் பணியில் இருந்தோம். சம்பவம் குறித்து ஆய்வாளருக்கு யார் தகவல் தெரிவித்தார் என்றால் பாராவில் இருந்தவர் தான் தகவல் தெரிவித்தார். 14.30 மணிக்கு ஒப்படைத்தபின்பு எதிரிகள் 1 மணிநேரம் காவல் நிலையத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். எதிரிகளை இரவு 8.30 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காக எதிரிகளுடன் வந்து விட்டோம்.

2. என்னை ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் வாங்கினாரா என்றால் இல்லை. என்னை ஆய்வாளர் கேட்டுக்கொண்டதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2025.07.28 17:46:55 +0530

DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.08/2025

**prosecution witness: LW-2 as PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கருணாநிதி | தொழில் | : | தலைமை காவலர் |
| த/பெ. | : | மார்க்கண்டன் | வயது | : | 40 |
| கிராமம் | : | மண்டபம் மரைன் காவல் நிலையம் | சமயம் | : | இந்து |
| தாலுகா | : | இராமேஸ்வரம் | | | |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>**28.07.2025**</u>

( 1 முதல் 7 எதிரிகள் திருச்சி சிறப்பு முகாமில் இருந்து ஆஜர், 8 ம் எதிரி மருத்துவ காரணங்களால் ஆஜர் இல்லை, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>**முதல் விசாரணை:-**</u>

1. நான் தற்போது மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.10.2023 ம் தேதியில் நானும், 3301 ஹவில்தார் என்பவரும் பணியில் இருந்த போது காவல் நிலைய குற்ற எண். 31/2023 ல் இலங்கைத்தமிழரான ரிச்மன்ட் டையாஸ் என்பவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதனை பதிவு செய்து அதில் சாட்சியாக கையெழுத்து செய்தேன். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தவரை நேரில் அழைத்து வந்து இந்தியன் கோஸ்ட் கார்ட் கடற்கரைக்கு சென்று அங்கு கோஸ்ட் கார்டு நவநீதன் என்பவர் கைப்பற்றி வைத்திருந்த அவர்களின் சொத்துக்களான நான்கு படகுகள், 5 ஜிபிஸ் கருவிகள், நான்கு செல்போன்கள், ஆகியவரை எதிரியை அடையாளம் காட்ட அதனை அவர்களிடம் இருந்து பெற்று கொண்டோம். பெற்றுக்கொண்டதை அத்தாட்சியாக தயார் செய்து அதில் கையொப்பம் செய்தோம். நானும், 3301 ஹவில்தார் மற்றும் இந்தியன் கோஸ்ட் கார்டை சேர்ந்த பிராதான அதிகாரியான நவநீதன் என்பவரும் கையொப்பம் செய்தோம்.**(என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகவும், கைப்பற்றுதலில் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.07.28 17:47:38 +0530

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. மண்டபம் மரைன் காவல் நிலையத்தின் அருகே தான் மண்டபம் VAO அலுவலகம் மற்றும் சர்வேயர் அலுலகம் இருக்கிறது என்றால் சரிதான். மரைன் காவல்நிலைத்திற்கு அருகே தான் அரசு அலுவலகங்கள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ தினத்தில் VAO அலுவலகத்தில் இருந்தார்களா என்றால் அது பற்றி தெரியவில்லை. கைப்பற்றிய பொருட்கள் அனைத்தையும் என்னிடம் எப்போது ஒப்படைத்தார்கள் என்றால் 24.10.2023 ம் தே 16.30 மணியளவில் நேவல் அலுவகத்திற்கு சென்று எங்களிடம் ஒப்படைக்கப்பட்டு நாங்கள் பெற்று வந்தோம். எங்களிடம் ஒப்படைத்த பொருள்களில் கடல் அட்டை மற்றும் மஞ்சல் இருந்ததா என்றால் இல்லை. அந்த இடத்தில் இருந்ததா என்றால் நான் பார்க்கவில்லை. வழக்கு சம்பந்தமாக எங்கள் அலுவலகத்திற்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் 24.10.2023 ம் தேதியன்று 14.30 மணிக்கு எங்கள் அலுவலகத்தில் எதிரிகளை ஒப்படைத்துவிட்டார்கள். எதிரிகளை கோஸ்ட்கார்டில் இருந்து ஒப்படைத்தார்கள். எதிரிகளை ஒப்படைக்கும் போது அலுவலகத்தில் யார் யார் இருந்தீர்கள் என்றால் நானும் , ஹவில்தாரும் மற்றும் ஆய்வாளரும் சேர்த்து மொத்த 3 நபர்கள் பணியில் இருந்தோம். காவல் நிலைத்தில் இருந்து கோஸ்ட் கார்டிக்கு 15.30 மணிக்கு சென்றோம்.

2. அப்போது கஸ்டம்ஸ் அதிகாரிகள் இருந்தார்களா என்றால் யாரும் இல்லை. Q பிரிவு போலீசார் இருந்தார்களா என்றால் யாரும் இல்லை. இந்த சம்பவம் குறித்து எந்த தேதியில் என்ன நடந்தது என்றால் 24.10.2023 ம் தேதியன்று கோஸ்ட் கார்டு அதிகாரிகள் எதிரிகளை கைது செய்து கொண்டுவந்தார்கள். வேறு எதுவும் தெரியாது. கைப்பற்றுதல் மகஜர் காலம் 4 ல் எதிரிகளிடம் இருந்து எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதில் நவநீதன் என்பவரிடம் இருந்து வழக்கின் எதிரிகள் அடையாளம் காட்டிய சொத்துக்களை கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த பொருட்களை எல்லாம் நானும், ஆய்வளாரும் கைப்பற்றினோம். கைப்பற்றுதல் மகஜர் எங்கே தயார் செய்தீர்கள் என்றால் இந்திய கோஸ்ட் கார்டில் வைத்து தயார் செய்தோம். கோஸ்ட் கார்டு அலுவலகம் என்பது தெற்குபகுதியில் உள்ளது என்றால் வடக்கு பகுதியில் உள்ளது. அரசு பள்ளிகூடம் அருகில் உள்ளது என்று சொன்னல் அது அலுவலகம் அல்ல. ஒப்புதல் வாக்குமூலம் மண்டம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து 15 மணிக்கு பதிவு செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் யார் எழுதினார்கள் என்றால் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கங்கள்

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.07.28 17:47:14 +0530

கொண்டது என்றால் அது எனக்குத் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆய்வாளர் கையொப்பம் செய்த பின்பு யார் யார் கையொப்பம் செய்தீர்கள் என்றால் ஆய்வாளர் கையொப்பம் போடவில்லை நான் தான் போட்டேன்.

3. நான் கையொப்பம் செய்த நேரம் 15.30 மணி ஆகும். வேறு யாரும் அதில் கையொப்பம் செய்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் ஆய்வாளர் கையொப்பம் செய்த பின்பு கையொப்பம் செய்தேன். அதோடு ஹபில்தார் கையொப்பம் செய்தார். வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். பின்பு கோஸ்ட் கார்டு நவநீதன் கையொப்பம் செய்தார். கைப்பற்றுதல் மகஜரில் புகார்தாரரான அகில்பதன் கையொப்பம் செய்தாரா என்றால் அது பற்றி தெரியாது. இந்த வழக்கின் புகார்தாரர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் மொத்தம் எத்தனை நபர்களை அழைத்து வந்தார்கள் என்றால் 8 நபர்களை அழைத்து வந்தார்கள். யார் அழைத்து வந்தார்கள் என்றால் கோஸ்ட் கார்டைச்சேர்ந்தவர்கள் அழைத்து வந்தார்கள். இவ்வாறு அழைத்து வந்ததாக ஆய்வாளரிடம் யார் சொன்னார்கள் என்றால் நான் எதுவும்சொல்லவில்லை.

4. கைப்பற்றுதல் மகஜரை யார் எழுதினார் என்றால் காவலர் போஸ் என்பவர் எழுதினார். கைப்பற்றுதல் மகஜரில் போஸ் கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை. கைப்பற்றுதல் மகஜரில் மொத்தம் 3 நபர்கள் மட்டும் தான் கையொப்பம் செய்தார்கள் வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை. என்னை இந்த வழக்கில் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் என்னிடம் வாங்கவில்லை. இராமேஸ்வரத்தில் உள்ள காவல் நிலையத்தில் இருந்து யாரேனும் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை.

5. இந்த வழக்கில் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள எதிரிகளுக்கும் கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 4 பைபர் படகின் அடையாளங்கள் எதுவும் தெரியாது என்றால் ஞாபகம்இல்லை. ஜிபிஎஸ் கருவி ஒவ்வொன்றும் எவ்வளவு எடை உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கிற்கும் இந்த எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும்இல்லை ஆய்வாளர் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2025.07.28 17:47:06 +0530